**தலைப்பு 327 – காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 327 - காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் போது பதவியணியினர் பயிற்சி செலவின விடயத்தின் கீழ் நிதியேற்பாடு செய்யப்பட்ட ரூபா 2,000,000 இல் செலவிடப்பட்ட தொகை ரூபா 695,128 ஆக இருந்ததுடன் சேமிப்பு ரூபா 1,304,873 ஆகும். அந்த சேமிப்பு 65 சதவீதம் ஆக இருந்ததுடன் அது நிதிப்பிரமாண இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு முரணானது ஆகும். | திறைசேரி செயலாளரின் இலக்கம் BD/CBP/01/01/05/2022 மற்றும் 2023.01.27 ஆந் திகதிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் இலக்கம் 01/2023 இன் மூலம் பதவியணியினர் பயிற்சிக்கான செலவினத்தின் கீழ் கட்டாயமாக உள்நாட்டு பயிற்சிக்காக மாத்திரம் பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்குமாறு அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் நிறுவனம் திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களை நடத்துதல் வரையறுக்கப்பட்டதன் காரணமாக இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தது. | மதிப்பீடு இயலுமானவரை சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கையில் நில வளங்களை உச்ச அளவில் மற்றும் நிலைபேறானதாக முகாமைத்துவம் செய்வதற்காக தேசிய காணி பயன்பாட்டு கொள்கை திருத்தங்களுக்கு 2018 ஆகஸ்ட் மாதத்தின் போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் பிரதான பணியாண இலங்கைக்காக தேசிய காணி பயன்பாட்டு கொள்கையை தயாரித்தல் மற்றும் காலரீதியில் தேவையான பிரகாரம் அதனை திருத்துவதற்கு தயாரிக்கப்பட்ட இறுதி வரைபு காணி மற்றும் சுற்றுலா அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் தேசிய காணி பயனபாட்டுக் கொள்கை தயாரித்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தேசிய காணி பயன்பாட்டு கொள்கை தயாரிக்கும் போது அதற்குரிய பணிப்பொறுப்புக்கள் பிரதான 02 பகுதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த பணிகளில் ஒரு பகுதி காணி அமைச்சு மற்றும் காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தினால் நிறைவேற்ற வேண்டியிருந்தது. கொள்கை திருத்த வெளியீடு அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் சமர்ப்பிப்பதற்காக 2023 மே 11 ஆந் திகதி காணி அமைச்சிற்கு அனுப்பட்டிருந்த போதும் திணைக்களத்திற்கு முன்நிற்க முடியாத கொள்கை ரீதியான விடயங்களின் அடிப்படையில் காணி அமைச்சினால் பூர்த்தி செய்யப்பட்ட தேசிய காணி பயன்பாட்டு கொள்கை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்காது இருந்ததுடன் அது திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்கு புறம்பான விடயம் ஆகும். | தேசிய காணி பயன்பாட்டு கொள்கை தயாரிக்கும் விடயங்கள் விரைவாக பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்பெறாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 323 பிரதேச செயலகப் பிரிவுகளில் காணி பயன்பாட்டு வீதம் நாளதுவரையாக்கப் பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அதன் எண்ணிக்கை 260 ஆகும். | பிரதேச காணி பயன்பாட்டு திட்டம் தயாரிக்கும் சில படிமுறைகளை மேற்கொண்டு இறுதித் திட்டம் 2023 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் பிரதான அலுவலகத்திற்கு அச்சிட்டு அல்லது (Soft Copy) ஆக கையளிக்குமாறு உதவிப் பணிப்பாளருக்கு (தி.இ.ப) அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த 323 திட்டங்களும் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஒரே தடவையில் ஆரம்பிக்கப் பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் மாதம் இறுதி வரையில் அதில் பூர்த்தி செய்யப்பட்ட திட்ட அறிக்கைகள் 260 பிரதேச பிரதான அலுவலகத்திற்கு கிடைத்துள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 சனவரி 24 ஆந் திகதி திணைக்கள பெறுகைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த பெறுகைத் திட்டம் 2022 ஆம் | எதிர்வரும் ஆண்டு முதல் சரியாக சமர்ப்பிப்பதற்கு குறிப்பிட்டு கொள்கின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் திசெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் கணக்கீட்டு உத்தியோகத்தர் மாத்திரம் அங்கீகரித்து இருந்தார். | | |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2.1(அ) இன் பிரகாரம் பெறுகை நிறுவனத்தினால் பிரதான பெறுகைத் திட்டம் ஆகக் குறைந்தது. 03 வருடகாலத்திற்கு பெறுகை எதிர்பார்க்கப்பட்ட திட்டத்தின் பட்டியல் இடப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தால் அந்த வழிகாட்டி கோவையின் பிரகாரம் அந்த பெறுகைத் திட்டம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டு முதல் சரியாக சமர்ப்பிப்பதற்கு குறிப்பிட்டு கொள்கின்றோம். | பெறுகைகள் வழிகாட்டி கோவைகளின் நியதிகள் பின்பற்றப்படல் வேண்டும். |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க திணைக்களத்திற்காக அதன் கணக்கீட்டு உத்தியோகத்தரால் 2022 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு கணக்காய்வாளரை நியமிக்குமாறு கோரப்படாமையினால் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் கணக்காய்வு பிரிவின் மூலம் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எனது 2023 ஒக்டோபர் 18 ஆந் திகதிய இலக்கம் LUPPD/1/2/-1 என்ற கடிதத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | திணைக்களத்திற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 697 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான எண்ணிக்கை 620 ஆக இருந்ததுடன் சிரேஸ்ட நிலையில் 21 வெற்றிடங்கள், மூன்றாம் நிலையில் 01 வெற்றிடம், இரண்டாம் நிலையில் 36 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலையில் 19 வெற்றிடங்கள் என மொத்தமாக 77 வெற்றிடங்கள் காணப்பட்டது. | இலங்கை நிருவாக சபையில் அங்கீகரிக்கப்பட்ட 04 பதவிகள் ஒரு பதவியை நீக்குவதற்கும், மற்றுமொரு பதவியை நீக்கி சட்ட உத்தியோகத்தர் பதவியை ஏற்படுத்துவதற்கும் பரிந்துரை அனுப்பப்பட்டுள்ளது. ஒரு மாவட்ட அலுவலகத்திற்கு ஒரு பதவி வீதம் உதவி / பிரதி பணிப்பாளர் (மாவட்ட காணி பயன்பாடு) பதவிகளில் 25 அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது 06 பதவியணியினர் சேர்க்கப்பட்டுள்ளனர். காணப்படுகின்ற வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறே திணைக்களமயப்படுத்தப்பட்ட உதவி / பிரதி பணிப்பாளர் பதவிகளுக்காக வரையறுத்த மற்றும் திறந்த போட்டிப் பரீட்சைகளை நடாத்தி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாக கொண்டு ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக மீண்டும் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |